அக்டோபர்: 29

## 5. தயவாகிய கனி!

வாசிக்க: எபேசியர் 4:32, கொலோசெயர் 3:12,13.

பிடித்தவர்களுக்கு உதவி செய்வது என்பது பண்டம் மாற்றம் போல. அவர்களுக்கு நாம் உதவி செய்வது, அவர்கள் நமக்கு உதவி செய்வது போல. ஆனால் நமக்கு பிடித்தவர்கள் பிடிக்காதவர்கள் என்று வித்தியாசம் பாராமல் அவர்களின் குறைவுகளில் நாமே முன்வந்து மனதுருக்கத்துடனும் பாரத்துடனும் உதவி செய்வதே தயவு ஆகும். எபேசியர் 4:32, கொலோசெயர் 3:12,13

இயேசு கிறிஸ்து பிடித்தவர்கள் பிடிக்காதவர்கள் என்கிற எந்த பாகுபாடும் பாராமல் எல்லாருக்கும் உதவி செய்தார். நாமும் பிடித்தவர்கள் பிடிக்காதவர்கள் என்கிற எந்த ஒரு பாகுபாடும் பாராமல் எல்லாருக்கும் மனமுவந்து உதவி செய்ய வேண்டும்.

### கேள்விகள்:

1. தயவு என்றால் என்ன?
2. பிடித்தவர் பிடிக்காதவர்கள் எங்கிற எந்த ஒரு பாகுபாடும் பாராமல் எல்லாருக்கும் நான் மனமுவந்து உதவி செய்கிறேனா?

## 6. நற்குணமாகிய கனி!

வாசிக்க: ரோமர் 12:16-21

நமக்கு உதவி தேவைப்படும் நேரங்களில் பிறர் நமக்கு உதவியாக இல்லாமல் நமக்கு எதிராகக் கெடுதல் செய்தாலும், அவர்களுக்கு உதவி தேவைப்படும் நேரங்களில் நாம் அவர்களுக்கு உதவியாக இருப்பதே நற்குணம் ஆகும். தீமையை நன்மையினால் வெல்லு. ரோமர் 12:16-21, அப்போஸ்தலர் 17:11, 1பேதுரு 3:9.

எனக்குக் கெடுதல் செய்கிறவர்களுக்கும் உதவி தேவைப்படும் நேரங்களில் நான் முழுமனதுடன் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்.

### கேள்விகள்:

1. நற்குணம் என்றால் என்ன?
2. எனக்கு கெடுதல் செய்கிறவர்களுக்கும் உதவி தேவைப்படும் நேரங்களில் நான் அவர்களுக்கு உதவியாக இருக்கிறேனா?

## 7. விசுவாசமாகிய கனி

இங்கு கூறப்பட்டுள்ள விசுவாசம் என்ற வார்த்தையை நேர்மை அல்லது உண்மை என்று மொழிபெயர்க்கலாம். நம்பிக்கைக்குரியவன், நேர்மைக்குரியவன் என்று சொல்லலாம்.

சூழ்நிலைகள் நமக்கு அனுகூலமாக இருக்கும்போது மாத்திரமல்ல, பாதகமான சூழ்நிலைகளிலும் நாம் தவறு செய்வதற்கான வாய்ப்புகள் வலிய வரும் சூழ்நிலைகளிலும், கர்த்தருடைய வசனத்தின்படி நேர்மையாக (உண்மையாக) வாழ்வதே விசுவாசமாகும். தானியேல் 3:17,18 யோபு 13:15.
வசனத்தின்படி வாழ்வதில் கஷ்டமும், நஷ்டமும் வந்தாலும், எல்லா சூழ்நிலைகளிலும் நான் கர்த்தருக்கு நேர்மையானவனாக (உண்மையானவனாக) இருக்கிறேன்.

## கேள்விகள்:

1. விசுவாசம் என்றால் என்ன?
2. வசனத்தின்படி வாழ்வதில் கஷ்டமும், நஷ்டமும் வந்தாலும், எல்லா சூழ்நிலைகளிலும் நான் நேர்மையானவனாக இருக்கிறேனா?